Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/01.08.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 01.08.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் வினையூக்கியாக, இளைஞர்கள் செயல்பட வேண்டும் என, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல், செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெறும் என, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேசிய பணப் பட்டுவாடா கழகம், யுபிஐ பணப் பரிவர்த்தனைகளுக்கான புதிய விதிமுறைகளை, இன்று முதல் அமல்படுத்தி உள்ளது.

புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியின் 75-ஆம் ஆண்டுப் பிறந்தநாள் கவிதைத் தொகுப்பு நூலை, இன்று சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் வெளியிட்டார்.

முர்மு

ஜார்கண்ட் மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பயணத்தின் 2-ஆம் நாளான இன்று, ஐஐடி-தன்பாத் சுரங்க தொழில் நுட்பக் கழகத்தின் 45-ஆவது

பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, பட்டங்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். தன்பாத் ஐஐடி நூற்றாண்டு விழா நினைவு தபால் தலையை, விழாவின் போது அவர் வெளியிட்டார். பட்டம் முடிக்கும் மாணவர்கள், 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், வினையூக்கியாக செயல்பட வேண்டும் என, குடியரசு தலைவர், தமது உரையில் கேட்டுக் கொண்டார். சிக்கலான பிரச்சனைகளுக்கு, புதிய தொழில் நுட்பங்கள் மூலம், புதுமையான, எளிய தீர்வுகளை கண்டுபிடிக்க, மாணவர்கள் முக்கியத் துவம் அளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார். உயர்கல்வி நிறுவனங்களில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கும், புதுமையாக்கம் மற்றும் ஸ்டார்ட்-அப் கலாச்சாரத்திற்கும் முக்கியத் துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.சமூகத் தேவைகளுக்கான, பழங்குடிப் பெண்களின் புதுமை படைப்புகள் குறித்து, ஐஐடி தன்பாத் உயர்கல்வி நிறுவனத்தின் அட்டல் புதுமையாக்க மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சியை, முன்னதாக, குடியரசு தலைவர் பார்வையிட்டார். மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், ஜார்கண்ட் மாநில ஆளுநர் திரு சந்தோஷ் கங்வார் உட்பட பலரும், பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர்.

*துணை ஜனாதிபதி*

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல், செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெறும் என, தேர்தல் ஆணையம் இன்று அறிவித்துள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்............

(வாய்ஸ்)

*துணை ஜனாதிபதி*

(வாய்ஸ்)

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கை, வரும் 7-ஆம் தேதி வெளியிடப்படும் என்றும், இம்மாதம் 21-ஆம் தேதி வரை வேட்பு மனுக்ககளை தாக்கல் செய்யலாம் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வேட்பு மனுப் பரிசீலனை, 22-ஆம் தேதி நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை திரும்பப் பெற, இம்மாதம் 25-ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்படும். செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் வாக்களிக்க உள்ளனர். தேர்தல் முடிந்தவுடன், அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*மோடி-வாரணாசி*

பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை வாரணாசிக்கு பயணம் மேற்கொண்டு, பிஎம்-கிஸான் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான 20ஆவது தவணை நிதியுதவியாக மொத்தம் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய்

வழங்கும் பணிகளை தொடக்கி வைக்கிறார். இதனால் 9 கோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெறுவார்கள். பிரதமர் நாளைய வாராணாசி பயணத்தின் போது, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு சுமார் 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஆகும்.

மோடி-கருத்து

பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது சுதந்திர தின விழா உரையில் இடம் பெற வேண்டிய கருத்துக்கள் குறித்து, பொது மக்களின் ஆலோசனைகளை நாடி உள்ளார். மக்கள் தங்கள் எண்ணங்களை மை-கவ் இணையதளம் மற்றும் நமோ-ஆப் மூலமாக பகிர்ந்து கொள்ளலாம் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம்

நாடாளுமன்றத்தில் இன்று, பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இருஅவைகளும், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை, முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும், ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவையில் அலுவல்கள், முதலில் பிற்பகல் 2 மணி வரையிலும், பின்னர் நாள் முழுவதற்கும், ஒத்தி வைக்கப்பட்டன. பீகார் மாநிலத்திற்கான சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள்

குறித்து அவையில் விவாதிக்க வேண்டுமென, இரு அவைகளிலும், எதிர்கட்சிகள் முக்கியமாக வலியுறுத்தின. தேர்தல் ஆணையம், அரசியல் சாசன அமைப்பு என்பதாலும், இப்பிரச்சனை ஏற்கனவே நீதிமன்ற விசாரணையில் இருப்பதாலும், விவாதங்களை அனுமதிக்க முடியாது என்று, மாநிலங்களவையில், அவையின் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ் கூறினார். கோவா சட்டமன்றத்தில், பழங்குடி மக்களுக்கு பிரதிநிதித் துவம் அளிப்பதற்கான முக்கிய மசோதாவை அவையில் விவாதிக்க விடாமல், எதிர்கட்சிகள் தடுப்பதாக, மக்களவையில், மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் குற்றம் சாட்டினார்.

*ராணுவம்-கடற்படை*

இந்திய கடற்படையின் 47-ஆவது துணைத் தலைவராக, வைஸ் அட்மிரல் சஞ்சய் வாத்ஸ்யாயன், இந்திய ராணுவத்தின் புதிய துணைத் தலைவராக லெப்டினன்ட் ஜென்ரல் புஷ்பேந்திர சிங் ஆகியோர், இன்று பொறுப்பேற்றுள்ளனர். புனே தேசிய பாதுகாப்பு அகாடமியில் பயின்றவரான திரு வாத்ஸ்யாயன், 1988-ஜனவரி முதல், இந்திய கடற்படையிலும் டேராடுன் இந்திய ராணுவக் கல்லூரியின் முன்னாள் மாணவரான திரு புஷ்பேந்திர சிங், 1987 டிசம்பர் முதல், இந்திய ராணுவத்திலும், சேவை புரிந்து வருகின்றனர்.

*யுபிஐ*

தேசிய பணப் பட்டுவாடா கழகம் என்னும் NPCI நிறுவனம், யுபிஐ பணப் பரிவர்த்தனைகளுக்கான புதிய விதிமுறைகளை, இன்று முதல் அமல்படுத்தி உள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.........

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

இன்று முதல் அமலாகும் புதிய விதிமுறைகளின்படி,

-யுபிஐ மூலமாக பணம் அனுப்பும் போது, பணம் பெறுபவரின் பெயர், அனுப்புநருக்கு காட்டப்படும்.

-ஒவ்வொரு யுபிஐ செயலி மூலமாகவும், பயனர்கள், தினசரி 50 முறை மட்டுமே, கணக்கு இருப்பை சரிபார்க்க அனுமதிக்கப்படுவர்.

-தானியங்கி பணப் பரிவர்த்தனைகள், யுபிஐ கட்டமைப்பின் பயன்பாடு உச்சத்தில் இல்லாத நேரங்களில் மட்டுமே, செயல்படுத்தப்படும்.

-பணம், செல்ல வேண்டிய கணக்கிற்கு சென்று விட்டதா என்பது உறுதியாகா விட்டால், பட்டுவாடா நிலவரத்தை, தலா 90 விநாடி இடைவெளி விட்டு, 3 முறை மட்டுமே பார்க்கலாம் என்றும், புதிய விதிமுறைகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ரங்கசாமி-கவிதை*

புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியின் 75-ஆம் ஆண்டுப் பிறந்த நாளை ஒட்டி, கலை-பண்பாட்டுத் துறையின் தமிழ் வளர்ச்சி சிறகம் சார்பில் தயாரிக்கப் பட்டுள்ள, 75 கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூலை, இன்று சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் வெளியிட்டார். சட்டப்பேரவையில் உள்ள சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, தமிழ் வளர்ச்சி சிறகத்தின் சிறப்புப் பணி அதிகாரி முனைவர் வாசுகி ராஜாராம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, நூலின் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

*திரைப்பட விழா*

தெற்காசியாவின் ஒரே வருடாந்திர சர்வதேச நடன-திரைப்பட விழாவான Manifest திரைப்பட விழா, புதுச்சேரியில் இன்று தொடங்குகிறது. Auro Apaar திரைப்படக் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்த, 4-ஆம் ஆண்டு Manifest திரைப்பட விழாவில், உலகெங்கிலும் இருந்து, 50-க்கும் மேற்பட்ட நடன திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. அலையன்ஸ் பிரான்சே கலையரங்கில் நடைபெறும் இந்த 3 நாள் விழாவின் தொடக்கமாக, இன்று மாலை, உலக புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் மற்றும் நடனக் கலைஞர் ஃபு லு-வின்

Snake in the Grass திரைப்படம் இடம் பெறுகிறது. முக்கியமான 6 சீன, அமெரிக்க, மற்றும் பிரஞ்ச் திரைப்படங்களும், இன்று இரவு திரையிடப் படுகின்றன. இம்முறை Manifest திரைப்பட விழாவில், உள்நாட்டு திறமைகளை வெளிப்படுத்தும் வகையில், இந்திய திரைப் படங்களுக்கான போட்டிப் பிரிவும் இடம் பெற உள்ளது. இப்பிரிவின் கீழ் வரும் திரைப்படங்கள், நாளை திரையிடப்படும். சீன மாணவர்களின் புதுமையான நடன திரைப் படங்களுக்கு, பிரத்யேக பிரிவு ஒன்றும், திரைப்பட விழாவில் இடம் பெறுகிறது. திரைப்பட விழாப் படங்களைப் பார்க்க, அனுமதி இலவசம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*ஸ்டாலின்-சுற்றுலா*

தமிழகத்தில் சுற்றுலா துறை சார்பில் பல்வேறு இடங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளை, முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் இருந்து, காணொளி காட்சி மூலம் தொடக்கி வைத்தார். திருவள்ளுர் மாவட்டம் பூண்டி நீர்த் தேக்கம், திருப்பத்துார் மாவட்டம் ஏலகிரி உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களுக்கான மேம்பாட்டு திட்டங்கள் இதில் அடங்கும். திருவண்ணாமலை மாவட்டத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைக்கும் பணிகளுக்கும் தமிழக முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 7-ஆம் தேதி வரை, தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் தஞ்சை-நாகை-திருவாரூர், மைலாடுதுறை, புதுக்கோட்டை, மற்றும் கடலூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்புள்ள தமிழக கடலோர பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக தஞ்சை மாவட்டம் மஞ்சளாறில், 5 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே, லண்டனில் நடைபெறும் 5-ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ஆம் நாளான இன்று பகல் உணவு இடைவேளை வரை, இங்கிலாந்து அணி, தனது முதலாவது இன்னிங்சில், 1- விக்கெட் இழப்பிற்கு, 109- ரன் எடுத்து இருந்தது. இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 224 ரன்.

*அரசியல்-பாலியல்*

அரசியல் கட்சிகளை, பாலியல் வன்கொடுமை தடுப்புச் சட்ட வரம்பின் கீழ் கொண்டு வரக் கோரும், பொது நலன் மனு ஒன்றை விசாரணைக்கு ஏற்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட இப்பிரச்சனையில், நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை என்று, தலைமை நீதிபதி திரு பிஆர் கவாய், நீதிபதி திரு வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று, தனது உத்தரவில் கூறியது. நீதிமன்றம் கடந்த டிசம்பர் மாதம், இதே போன்ற ஒரு மனுவை தள்ளுபடி செய்த போது, மனுதாரர், தேர்தல் ஆணையத்தை அணுகலாம் எனக் கூறி இருந்தது. இதைத் தொடர்ந்து மனுதாரர் கடந்த மார்ச் மாதம், தேர்தல் ஆணையத்திற்கு மனு அனுப்பிய போதிலும், இதுவரை பதில் வரவில்லை எனக் கூறி, மீண்டும் உச்சநீதி மன்றத்தை அணுகி இருந்தார்.

*பிஜேபி-மாலேகான்*

நாட்டில் காவித் தீவிரவாதம் இருப்பதாக, மாலேகான் குண்டு வெடிப்பு அடிப்படையில் காங்கிரஸ் மேற்கொண்ட பொய் பிரச்சாரம், இதுபற்றிய வழக்கில் நேற்று என்ஐஏ வெளியிட்ட தீர்ப்பினால் முற்றிலும் குலைந்து விட்டதாக பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு சம்பீத் பாத்ரா கூறி உள்ளார். இந்த வழக்கு முற்றிலும் ஓட்டு வங்கி நோக்கத்தில் பின்னப்பட்ட அரசியல் சதி என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். மாலேகான் குண்டு வெடிப்பு வழக்கில் ஆர்எஸ்எஸ்

தலைவர் திரு மோகன் பகவத்தை கைது செய்ய தமக்கு அழுத்தம் வந்ததாக புலனாய்வு அதிகாரி ஒருவர் கூறி இருப்பதையும் திரு பாத்ரா சுட்டிக் காட்டினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில் வினையூக்கியாக, இளைஞர்கள் செயல்பட வேண்டும் என, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல், செப்டம்பர் 9-ஆம் தேதி நடைபெறும் என, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேசிய பணப் பட்டுவாடா கழகம், யுபிஐ பணப் பரிவர்த்தனைகளுக்கான புதிய விதிமுறைகளை, இன்று முதல் அமல்படுத்தி உள்ளது.

புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியின் 75-ஆம் ஆண்டுப் பிறந்தநாள் கவிதைத் தொகுப்பு நூலை, இன்று சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் வெளியிட்டார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/01.08.2025/Script.

---------------------------